**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்.**

POP. No: 64/2019 நாள்: 04.09.2025

மசா.1, திருமதி.ஜெயலட்சுமி

**மசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் கணவர் பெயர் அன்பு. எனக்கும் என் கணவருக்கும் இடையில் விவாகரத்து ஏற்பட்டுவிட்டது. எங்களுக்கு 2004ம் ஆண்டு திருமணம் ஏற்பட்டு 2007ம் ஆண்டு விவாகரத்து ஏற்பட்டுவிட்டது. நீதிமன்றம் மூலமாக தான் எங்களுக்கு விவாகரத்து ஏற்பட்டது. நான் என் கணவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரவில்லை நீதிமன்றமும் அதற்கு ஏற்ப உத்தரவிடவில்லை. எங்களுக்குள் குழந்தை எதுவும் பிறக்கவில்லை. என் கணவர் தற்பொழுது எங்கு உள்ளார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. அவர் உயிரோடு உள்ளாரா என்று எனக்கு தெரியாது. என்னை கடந்த 12.08.2025ம் தேதியில் முதல் விசாரணை செய்யப்பட்ட பொழுது என் கணவர் அன்பு என்பவர் இறந்துவிட்டதாகவும் சொல்லிவிட்டு தற்பொழுது அவர் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது என்று முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அப்படியில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சி பிரமாண பத்திரிக்கையை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்று கேட்டால் படித்து பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சி பிரமாண பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் வழக்கறிஞர் தயார் செய்து வைத்திருந்ததில் நான் கையொப்பம் செய்தேன். நான் கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ள பேப்பரில் என்ன விபரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு பற்றிய விபரம் எனக்கு தெரியும். 2ம் மனுதாரர் மனோரஞ்சிதம் என்பவர் என்னுடைய இளைய சகோதரி. 2ம் மனுதாரரின் கணவர் என்ன தொழில் செய்கிறார் என்று கேட்டால் அவர் வாகன ஓட்டுநராக உள்ளார். டிரக்கர் லாரியை ஓட்டுவார். என் அப்பா பெயர் வேலு. என் அப்பாவுக்கு ஒரு மகனும், 3 மகள்களும் உள்ளன. என் மூத்த அக்கா பெயர் சண்முகத்தாய் அவர் தற்பொழுது வேறு ஊரில் உள்ளார். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் சொத்து விபரத்தில் 3 ஏக்கர், 54 சென்ட் என்று சொல்லியுள்ளேன் அது எப்படி பாத்தியம் என்றால் என் அப்பாவுக்கு பாத்தியப்பட்டிருந்து அதனை அவருடைய மூன்று மகள்களான எங்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார். செட்டில்மெண்ட் ஆவணமானது ஏற்பட்ட தேதியானது 24.05.2012 என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணப்படிக்கு மூன்று பெண்பிள்ளைகளுக்கும் அந்த சொத்தில் பாத்தியம் என்றும் நானும் என் இளைய சகோதரி மட்டுமே இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதால் இந்த மனுவானது செல்லதக்கதல்ல என்றும் இந்த மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. நானும் என் மூத்த சகோதரி சண்முகத்தாயும் சேர்ந்து வழக்கில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் என் சகோதரர் வீரப்பன் என்பவருக்கு 2017ம் ஆண்டு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் அவர் எங்களை ஏமாற்றி எழுதிவாங்கியுள்ளார். 13.03.2017 ம் தேதியில்

நானும், என் மூத்த சகோதரியும் சேர்ந்து என் அம்மாவின் பாக சொத்தை ஒரு காளீஸ்வரி என்பவருக்கு கிரையமாக எழுதிக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் நாங்கள் அப்படி எழுதிக்கொடுக்கவில்லை அந்த காளீஸ்வரி யார் என்று தெரியாது. நான் வழக்கில் உள்ள 1ம் எதிர்மனுதரருக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்திற்குள் சொத்தை பொறுத்தமட்டில் ஏற்கனவே பாகம் ஆகிவிட்டது என்றும் அதை அனுசரித்து நாங்கள் 1ம் எதிர்மனுதாரரான என் தம்பிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை 16.09.2017ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் நாங்கள் அப்படி எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை அது பற்றி எங்களுக்கு தெரியாது. நான் தற்பொழுது என்ன வேலை பார்க்கிறேன் என்று கேட்டால் கூலி வேலை செய்கிறேன். களை வெட்டுவேன். எந்த வேலைக்கு செல்வேன். மாதம் ஒன்றுக்கு ரூ.3000/-ம் வரை வருமானம் கிடைக்கும். என் வீட்டிற்கு கேஸ் சிலிண்டர் இணைப்பு கிடையாது விறகு அடுப்பு பயன்படுத்துகிறேன். என் திருமணம் சமயத்தில் என் அப்பா எனக்கு நகை சீர்சீராட்டு செய்து திருமணம் செய்து வைத்தார். இரண்டு பவுன் நகை போட்டார். என்னிடம் தற்பொழுது வேறு நகை உள்ளதா என்று கேட்டால் இல்லை. என்னிடம் தற்பொழுது வேறு நகைகள் உள்ளது என்றும் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு வேறு சொத்து உள்ளதா என்று கேட்டால் ஒரே ஒரு சொத்து தான் இருந்தது அதை 1ம் எதிர்மனுதாரர் பிடுங்கி கொண்டார்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி 1 மற்றும் 2 எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of September 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.